**இலங்கை வூசு சம்மேளனம் - 2023**

**------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை வூசு சம்மேளனத்தின் (‘‘சம்மேளனம்’’) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 1993 ஆம் ஆண்டின் 47 ஆம் எண் விளையாட்டு (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 21-அ இற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்கள் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் பத்தி 1.5 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

**1.2 அபிப்பிராயத்தினை மறுப்பதற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயத்தினை தெரிவிக்கவில்லை.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சம்மேளனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சம்மேளனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வதும் கணக்காய்வாளர் அறிக்கையை வெளியிடுவதும் எனது பொறுப்பு ஆகும். இருப்பினும், இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியவில்லை.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தொகை ரூபா. | இல்லாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | கொடுப்னவுகள் | 1,398,856 | விலைப்பட்டியல்கள் மற்றும் பட்டியல்கள் | சில துணை ஆவணங்கள் இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றன. | கொடுப்பனவுகளின் துல்லியத் தன்மையினை உறுதி செய்வதற்கு தேவையான விலைப்பட்டியல்கள் மற்றும் பட்டியல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள்<br>தேய்வு | 18,024,557<br>1,388,959 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, ஒவ்வொரு வகையான சொத்துக்களுக்கும் தனிப்பட்ட செலவு வகைப்படுத்தல்கள் மற்றும் நிலையான சொத்துக்களின் உறுதிப்படுத்தல் அறிக்கை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டைப் பேணுவதற்கு தேவையான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம், மேலும் எதிர்கால கணக்காய்வுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தகவல்களை இன்னும் விரிவாக சமர்ப்பிப்போம் என்று நாம் நம்புகின்றோம். | இருப்பு மதிப்பீட்டினை மேற்கொண்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா. 1,484,791 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 614,882 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,099,673 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கான முக்கிய காரணம் செலவினம் ரூபா 26,436,247 ஆல் அதிகரித்தமைக்கு எதிராக வருமானம் ரூபா 28,535,919 ஆல் அதிகரித்திருந்தமை ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சர்ச்சைக்குரிய தன்மை கொண்ட கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| தேசிய பயிற்சியாளர் மற்றும் ஒரு தேசிய வீரரின் தந்தையின் இறுதிச் சடங்கிற்காக ரூபா.110,000 செலவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், அத்தகைய செலவுகளைச் செய்வது தொடர்பாக சம்மேளனத்தின் யாப்பில் எந்த ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிர்வாகக் குழுவிடம் அங்கீகாரம் பெற்றுக்கொண்ட பின்னரே நாங்கள் அந்தக் கொடுப்பனவுகளைச் செய்துள்ளோம். மேலும், Wushu விளையாட்டு மற்றும் WFSL-ஐ மேம்படுத்துவதற்காக அவர் அளித்த பங்களிப்பைக் கருத்தில் கொண்டு இந்த நன்கொடையை நாங்கள் வழங்கியுள்ளோம் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம். | அனைத்து கொடுப்பனவுகளும் சம்மேளனத்தின் யாப்பின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| எந்தவொரு நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படாமல் ஏப்ரல் முதல் திசெம்பர் 2023 வரையிலான காலப்பகுதியில் வங்கி நடைமுறை கணக்கில் சராசரியாக ரூபா. 1,000,000 தொகையான காசு மீதி தக்கவைக்கப்பட்டிருந்தது மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் இந்த மீதி ரூபா. 3,534,374 ஆக அதிகரித்துள்ளது. | உங்கள் பரிந்துரையினை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம், மேலும் மிகவும் செயற்திறனுள்ள நிதி முகாமைத்துவ நடைமுறையைப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மிகையான காசு மீதியினை செயற்திறனான முறையில் முதலீடு செய்தல் வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டுதல்களில் உள்ள விதிகளைப் பின்பற்றாமல், சம்மேளனம் 2 தனியார் நிறுவனங்களிடமிருந்து ரூபா.569,300 பெறுமதியான டி-சேர்ட்கள், பாட்டம்ஸ், ஜாக்கெட்டுகள் மற்றும் பயிற்சி முகாம் டி-சேர்ட் களை வாங்கியது. | குறிப்பிடப்பட்ட பொருட்களுக்கு பெறப்பட்ட விலை மனுக்களை நாங்கள் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடு செய்வோம். | பெறுகை வழிகாட்டுதல்களில் உள்ள விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமல், 2023 ஆம் ஆண்டில் ஒரு கம்பனியிடமிருந்து விமான பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்கு சம்மேளனம் ரூபா.14,837,500 தொகையினை செலவு செய்துள்ளது. மேலும், யாருக்காக பயணச்சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டன என்பது பற்றிய தகவல்கள் பெறுகை உறுதிச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதனால், கொள்வனவு செய்த பயணச்சீட்டுக்கள் அவை கொள்வனவு செய்ய்ப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. | அதிக பெறுமதியுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு எதிர்காலத்தில் ஏல நடைமுறையைப் பின்பற்றுவதற்கு திட்டமிட்டுள்ளோம். | பெறுகை வழிகாட்டுதல்களில் உள்ள விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |